## August 29, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் தமிழக பின்னலாடை ஏற்றுமதி ஆண்டுக்கு ரூ.3,000 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த பாதிப்புகளைச் சீர்செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

    i. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்கா அறிவித்த 25 சதவீத கூடுதல் வரிவிதிப்பு ஆகஸ்ட் 27 முதல் அமலுக்கு வந்தது. இதன் காரணமாக அமெரிக்காவில் இந்திய பொருள்களுக்கு விதிக்கப்படும் வரியின் அளவு 50 சதவீதமாக உயர்ந்துள்ளது.
    ii. இந்தியாவிலிருந்து 1,100 கோடி டாலர் மதிப்பிலான ஜவுளி, ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகின்றன. இது இந்தியாவின் மொத்த ஆடை ஏற்றுமதியில் 30 சதவீதமாகும். அதிலும், தமிழகத்திலிருந்து ஆண்டுக்கு சுமார் ரூ.35 ஆயிரம் கோடி முதல் ரூ.40 ஆயிரம் கோடி மதிப்பிலான ஆயத்த ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
    iii. அதேபோல, இந்தியாவின் ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருள்கள் 21 சதவீதம் அமெரிக்காவுக்கு செல்கிறது.
    iv. நாட்டின் தோல் பொருள்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழகம் முக்கியப் பங்கு வகிக்கிறது . இப்போதைய கூடுதல் வரிவிதிப்பு காரணமாக தமிழகத்தின் தோல்பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்கான அமெரிக்காவின் முன்பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

2. 15-ஆவது இந்தியா-ஜப்பான் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி 2 நாள் (ஆக.29-30) பயணமாக ஜப்பான் புறப்பட்டார்.

    i. இந்தப் பயணத்தின்போது பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா-ஜப்பான் இடையே உள்ள சிறப்பு உத்திசார்ந்த மற்றும் உலகளாவிய கூட்டுறவு குறித்து பிரதமர் மோடியும், ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவும் மறுஆய்வு செய்ய உள்ளனர்.
    ii. இதைத் தொடர்ந்து சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப் பின் (எஸ்சிஓ) உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி 2 நாள் (ஆக.31- செப்.1) பயணமாக சீனா செல்ல உள்ளார்.
    iii. ரஷியா, இந்தியா, ஈரான், சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பெலாரஸ் ஆகிய 10 நாடுகள் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. சுழற்சி முறையில் இந்த ஆண்டு அமைப்பின் தலைவராக சீனா உள்ளது.
    iv. இந்த மாநாடு இரு நாள்களில் முடிவடைந்தாலும் செப்டம் பர் 3-ஆம் தேதி சீன ராணுவத்தின் பிரம்மாண்டமான அணிவகுப்பு நடைபெற இருக்கிறது. ஜப்பானை சீனா வெற்றிகரமாக எதிர் கொண்டதைக் கொண்டாடும் இந்த நிகழ்ச்சியில் மாநாட்டுக்கு வரும் பல தலைவர்கள் பங்கேற்க இருக்கின்றனர். தனது நவீன ரக ஆயுதங்கள் பலவற்றையும் இந்த ராணுவ அணிவகுப்பில் சீனா காட்சிப்படுத்த இருக்கிறது.

3. அமெரிக்காவுடன் விரைவில் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும் என மத்திய அரசு அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.
   i. இந்திய பொருள்கள் மீது அமெரிக்கா விதித்த கூடுதல் வரி உள்பட 50 சதவீத வரி ஆக.27-ஆம் தேதி அமலுக்கு வந்தது.
   ii. அமெரிக்க வரி விதிப்பால் ஏற்றுமதியாளர்கள் சந்திக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகாண ஏற்றுமதியை அதிகரிப்பது, புதிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை (எஃப்டிஏ) அமல்படுத்துவது, உள்நாட்டுச் சந்தையை வலுப்படுத்துவது என மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
   iii. இதுதவிர குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை ஏற்றுமதியாளர்களுக்கு அவசரகால நிதியுதவி வழங்கும் திட்டம், கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டிப்பது என ஏற்றுமதியாளர்களுக்கு நிதிச்சுமை ஏற்படாத வகையிலான முன்னெடுப்புகளையும் மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.
   iv. பட்ஜெட்டில் அறிவித்ததைப் போல் ரூ.25,000 கோடி மதிப்பில் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தை (2025-2031) விரைவில் அமல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது ஐ.நா. விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமல்படுத்துவதற்கான நடைமுறையை தொடங்கிவிட்டதாக பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் அறிவித்தன.
   i. ‘ஸ்னாப் பேக்’ என்றழைக்கப்படும் அந்த நடைமுறை, ஈரானுடன் கடந்த 2015-ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டபோது வல்லரசுகளால் உருவாக்கப்பட்ட செயல்வடிவம் ஆகும்.
   ii. இந்த நடைமுறையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்ய முடியாத வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது.
   iii. இந்த நடைமுறை முழுமையடைந்தால், ஈரானின் வெளிநாட்டு சொத்துகள் முடக்கப்படும்.
   iv. ஈரானால் எந்த நாட்டுடனும் ஆயுத ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாது.
   v. மேலும் ஈரான் பலிஸ்டிக் ரக ஏவுகணை சோதனை நடத்தினால் அதற்காக தண்டனை விதிக்கப்படும்.
   vi. இது, ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் உள்ள ஈரானை மேலும் பாதிக்கும். ஐரோப்பிய நாடுகளின் இந்த நடவடிக்கை, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் கொண்டு வர 30 நாள்கள் எடுத்துக்கொள்ளும்.

5. கடந்த 2024-25- ஆம் கல்வி ஆண்டில், நாட்டில் முதல் முறையாக பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை 1 கோடியைத் தாண்டியது மத்திய கல்வி அமைச்சக

தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

i. மாணவர்- ஆசிரியர் விகிதம் முன்னேறவும், தரமான கல்வியை உறுதி செய்யவும், ஆசிரியர்களைப் பணியமர்த்துவதில் பிராந்திய அளவில்உள்ள ஏற்றத்தாழ்வுகளை கையாளவும் ஆசிரியர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது முக்கிய நடவடிக்கையாகும்.
ii. இந்த எண்ணிக்கை 2022-23-இல் இருந்து சீராக அதிகரித்து வருகிறது. கடந்த 2024-25-ஆம் கல்வி ஆண்டில், நாட்டில் முதல்முறையாக பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை 1 கோடியை தாண்டியது.
iii. பள்ளிகளில் 30 மாணவர்களுக்கு ஓராசிரியர் இருக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
iv. இந்நிலையில், அடிப்படை கல்வியில் 10 மாணவர்களுக்கு ஓராசிரியர், தொடக்கக் கல்வியில் 13 மாணவர்களுக்கு ஓராசிரியர், நடுநிலை கல்வியில் 17 மாணவர்களுக்கு ஓராசிரியர், மேல்நிலை கல்வியில் 21 மாணவர்களுக்கு ஓராசிரியர் என மாணவர் - ஆசிரியர் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது.
v. இது ஒவ்வொரு மாணவர் மீதும் கூடுதலாக கவனம் செலுத்துதல், ஆசிரியர்கள்-மாணவர்கள் இடையே கலந்துரையாடலை வலுப்படுத்துல், மேம்பட்ட கற்றல் அனுபவத்துக்குப் பங்களித்தல், கல்வி கற்பித்தலில் நற்பலன்கள் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.
vi. தமிழ்நாட்டில் 23 மாணவர்களுக்கு ஓராசிரியர் உள்ளார்.

6. புது தில்லியில் நடைபெற்ற தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில், மகளிர் ஒற்றையரில் போட்டித்தர வரிசையில் முதலிடத்தில் இருந்த அனாஹத் சிங் தொடர்ந்து 3- ஆவது முறையாக சாம்பியன் ஆனார்.
   i. ஆடவர் ஒற்றையரில், வேலவன் செந்தில்குமார் 2-ஆவது முறையாக வாகை சூடினார். கடைசி யாக வேலவன் 2023-இல் சாம்பியனானார்.

7. எச்1பி நுழைவு இசைவு (விசா) திட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் திட்டமிட்டு வருவதாக அந்நாட்டு வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்தார்.
   i. எச்1 பி விசா நடைமுறையின்கீழ் உலகம் முழுவதும் இருந்து பணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு அதிக ஊதியத்துடன் அமெரிக்காவில் வேலை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப (ஐடி) பணியாளர்கள் அதிகமாக பயனடைந்து வருகின்றனர்.
   ii. அதேபோல் அமெரிக்காவில் நிரந்தரமாக தங்கி பணியை தொடர்வதற்காக வழங்கப்படும் நிரந்தர குடியுரிமை அட்டை (கிரீன் கார்டு) முறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன.
   iii. எனவே இந்த 2 திட்டங்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளவும் அதற்குப் பதிலாக தங்க அட்டை (கோல்டு கார்டு) வழங்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. தங்க அட்டை திட்டத்தின்கீழ் உலகம் முழுவதும் உள்ள திறமைசாலிகளுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

iv. அதுமட்டுமின்றி அமெரிக்காவின் அனைத்துத் துறைகளிலும் அமெரிக்கர்களுக்கே பணிவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

8. 1993-இல் இருந்து புது தில்லியிலும் டாக்காவிலும் ஆண்டுக்கு இருமுறை இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.
   i. இந்நிலையில், ஆக.25 முதல் 28 வரை வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்ற எல்லை விவகாரங்கள் பேச்சுவார்த்தையில் இந்திய எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) தலைமை இயக்குநர் தல்ஜித் சிங் செளதரி தலைமையிலான இந்தியக் குழுவும் வங்கதேச பாதுகாப்பு படை (பிஜிபி) தலைமை இயக்குநர் முகமது அஷ்ராஃபுசாமன் தலைமையிலான வங்கதேசக்குழுவும் பங்கேற்றது.
   ii. இது தொடர்பாக பிஎஸ்எஃப் வெளியிட்ட செய்திக்குறிப்பில்; பிஎஸ்எஃப் அதிகாரிகள் மற்றும் இந்திய குடிமக்கள் மீது வங்கதேசத் தைச் சேர்ந்த குற்றவாளிகள், சமூக விரோதிகள் அத்துமீறி நடத்தும் தாக்குதல்கள் குறித்து பிஜிபியிடம் முறையிடப்பட்டது.

9. அணுசக்தி ஆணையத்தின் தலைவரும், மத்திய அணுசக்தித் துறையின் செயலருமான பிரபல இயற்பியல் அறிஞர் அஜித்குமார் மொஹந்திக்கு ஆறு மாத கால பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.
10. அகமதாபாதில் காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் அஜய பாபு வல்லுரி ஆடவர் 79 கிலோ பிரிவில் 335 கிலோவைத் தூக்கி தங்கம் வென்றார்.